**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 9/2024 |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | வெள்ளத்தாய் | CASTE | : | |
| W/O. | கருத்தக்கண்ணன் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | போடிநாயக்கன்பட்டி | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 79 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.04.2025**

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் வாரிசு சான்றிதழ் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன், நான் சார்பதிவாளராக பணிபுரிந்து 15 வருடங்களுக்கு முன்பு ஒய்வு பெற்றுவிட்டேன். எனது கணவர் கருத்தக்கண்ணன் நேசனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேசனில் விற்பனையாளராக வேலை பார்த்தார். எனக்கும் எனது கணவருக்கும் மாலதி என்ற மகள் இருந்து இறந்துவிட்டார். எனது மகளை தவிர எனக்கு வேறு பிள்ளைகள் இல்லை. எனது கணவர் உடல்நிலை சரியில்லாமல் 2020ம் வருடம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனது கணவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது 1ம் பிரதிவாதியும் அவரது மகள் கோடிஸ்வரியும் எனது கணவரை மருத்துவமனையில் வந்து பார்த்தார்கள் என்றால் எனக்குத்தெரியாது.

2. எனது கணவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற காலத்தில் என்னால் நடக்கமுடியாத காரணத்தால் பெரும்பாலும் வீட்டில் இருப்பேன் என்றால் சரிதான். எனது கணவரை எனது பேரன் பார்த்துக்கொண்டான். எனது கணவர் சிகிச்சையில் இருந்தபோது 1ம் பிரதிவாதியும் அவரது மகள் பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. எனது கணவர் இறந்தபின்பு 1ம் பிரதிவாதியும் அவரது மகள் கோடிஸ்வரியும் எனது வீட்டிற்கு வந்தார்கள் என்றால் சரிதான்.

3. எனது கணவரும், 1ம்பிரதிவாதியும் நெருங்கிய உறவினர் என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. எனது கணவரின் சொந்த மாமன் மகள் தான் 1ம் பிரதிவாதி என்றாலும் எனது கணவர் சுமார் 50 வருடங்களுக்குமுன்பு 1ம் பிரதிவாதியை திருமணம் செய்துகொண்டார் என்றால் சரியல்ல. எனது கணவருக்கும் 1ம்

பிரதிவாதிக்கும் நடந்த குடும்ப வாழ்க்கையில் பிறந்தவர்தான், அவரது மகள் கோடீஸ்வரி என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது, எனக்குத் தெரியாமல் 1ம் பிரதிவாதியும் எனது கணவரும் திருமணம் செய்துகொண்டார்கள்.

4. என்னிடம் காட்டப்படும் 1ம் பிரதிவாதியின் ஆதார் அட்டையில் அவரது கணவர் பெயர் கருத்தக்கண்ணன் என்று உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் குடும்ப அட்டையில் அவரது கணவர் பெயர் கருத்தக்கண்ணன் என்று பெயர் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் மகள் கோடீஸ்வரி பள்ளி மாற்றுச்சான்றிதல் மற்றும் சாதிச்சான்றிதழில் அவர் தகப்பனார் பெயர் கருத்தக்கண்ணன் என்று உள்ளது என்றால் சரிதான். கோடீஸ்வரியின் வாக்காளர் அடையாள அட்டை, வருமான சான்றிதழ் மற்றும் இருப்பிடச்சான்றிதழில் அவரது தகப்பனார் பெயர் கருத்தக்கண்ணன் என்று உள்ளது என்றால் சரிதான்.

5. எனது கணவரின் இறப்புச்சடங்கில் 1ம் பிரதிவாதியையும் அவரது மகள் கோடீஸ்வரியையும் அவர்கள் செய்யவேண்டிய சடங்கை செய்ய அனுமதிக்காததால் தான் அவர்கள் அதே தேதியில் வாடிப்பட்டி தாசில்தாரிடம் ஆட்சேபணை மனு கொடுத்தார்கள் என்றால் சரிதான். வாரிசு சான்றிதழ் கேட்டு மனு கொடுத்தால் 2ம் மனைவி இருப்பதாக ஆட்சேபனை மனு வரும் பட்சத்தில் விசாரணை செய்து அனைத்து வாரிசுகளையும் சேர்த்துதான் வாரிசு சான்றிதழ் தருவார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும்.

6. எனது கணவருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் 50 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது என்றால் எனக்குத்தெரியாது. மேற்படி திருமணத்தின்படி பிறந்த கோடீஸ்வரி தற்போது உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு ஏற்கெனவே திருமணம் நடந்து அவர் கணவர் இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் எனக்குத்தெரியாது. 1ம் பிரதிவாதிக்கும் எனது கணவருக்கும் பிறந்த கோடீஸ்வரிக்கு தற்போது என்ன வயது என்றால் 40 வயது இருக்கும்.கோடீஸ்வரிக்கு இன்னும் திருமணம் நடக்கவில்லை என்றால் சரிதான்.

7. கருத்தக்கண்ணன், அவரது சகோதரர்கள் மற்றும் 1ம் பிரதிவாதி உசிலம்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 29/2019 வழக்குத்தாக்கல் செய்து நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் எனக்குத்தெரியும். மேற்படி வழக்கில் எனது கணவர் உயிருடன் இருந்த காலத்தில் அவரும் சேர்ந்துதான் வழக்கு

தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு எனது கணவருக்கு பூர்வீகமான பாத்தியப்பட்ட அவரது சொந்த ஊரில் உள்ள சொத்துக்களுக்கு மட்டும்தான் போடப்பட்டது என்றால் சரிதான்.

8. எனக்கு வாடிப்பட்டியில் வீடு உள்ளது. நான் அதில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் காலியிடங்கள் வாங்கி வைத்துள்ளார், நான் வழக்கிற்காக அதை மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. எனது கணவருக்கு வேறு வாரிசு உள்ளதால் என்னை மட்டும் வாரிசாக பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தாலுகா அலுவலகத்தில் வாரிசு சான்றிதழ் கேட்டு கொடுத்த மனுவை எதன் அடிப்படையில் தள்ளுபடி செய்தார்கள் என்றால் இறந்த நபருக்கு 2 மனைவிகள் என்பதால் நீதிமன்றத்திற்கு சென்று வழக்கு தாக்கல் செய்யுமாறு மனுவை தள்ளுபடி செய்தார்கள். எனது கணவரின் 2ம் மனைவியின் மகளான கோடீஸ்வரியை வாரிசாக மனுவில் சேர்த்து கொடுத்திருந்தால் தாலுகா அலுவலகத்தில் வாரிசு சான்றிதழ் கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

2. அனைத்து வாரிசுகளையும் சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
**வாடிப்பட்டி.**